# லண்டனில் நடந்த வேலணையூர் பொன்னண்ணாவின் நூல் வெளியீடு

**என்.செல்வராஜா, நூலகவியலாளர், லண்டன்.**

ஈழத்திலிருந்து தமிழர்களால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது புலப்பெயர்வாக 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் (1870) பொருளாதார நோக்குடன் இடம்பெறத்தொடங்கிய மலாயாவுக்கான புலப்பெயர்வு அமைகின்றது. சிங்கப்பூர் வைத்திலிங்கம் என்ற யாழ்ப்பாணத்தவரே முதலாவது புலப்பெயர்வை 1870இல் மேற்கொண்டதாக வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன. அன்று தொடக்கி வைக்கப்பட்ட கடல்கடந்த வாழ்வியல் இன்று இருபத்தியொராம் நூற்றாண்டு வரை தொடர்கின்றது. தாயகத்தைப் பிரிந்து வந்த எவரும் வெறும் கையுடன் வந்ததில்லை. தாம் முதுசொமாகக் கொண்ட பண்பாடு, நாகரீகம், கலை, இலக்கியம், அறிவியல் என்று அனைத்தையும் தான் சுமந்து கொண்டு புலம்பெயர்கிறார்கள். வலிமைமிகுந்த தமது தாயக வாழ்வியல் பின்புலங்களின் உதவியால் சிலர் புலம்பெயர் வாழ்வில் ஏதாவது ஓரிடத்தில் தம்மைப் பொருத்திக்கொண்டு அங்கும் தமது வாழ்வில் உயர்ச்சியடைகின்றார்கள். திருப்தியும் கொள்கிறார்கள். சிலர் புலத்தில் தான் வாழ்ந்த வாழ்வியல் சூழலுக்கு ஏற்ப, புலம்பெயர்ந்து வந்தபின்னர் ஏற்பட்ட முற்றிலும் மாற்றம் மிகுந்த சூழலில் தம்மைப் பொருத்திக்கொள்ள முடியாமல் திண்டாடுகின்றார்கள்.

தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து உலகெங்கும் பரந்து வேரோடியிருக்கும் இன்றைய ஈழத்தமிழினம் புதியதொரு வரலாற்றின் முன்னிலைப் பதிவுகளாகியுள்ளார்கள். இவர்கள் இன்று விட்டுச்செல்லப்போகும் வாழ்வியல் பதிவுகள்தாம் எதிர்காலத்தில் புகலிடத்து ஈழத்தமிழரின் புதியதொரு சமூகத்தின் வரலாறாகப் பதிவுசெய்யப்படப் போகின்றன. எமது வரலாற்றை நாமே எழுதுவதில்லை. நாம் இன்று விட்டுச்செல்லப் போகும் பதிவுகளே எதிர்காலத் தலைமுறையினர் எழுதப்போகும் எமது தமிழினத்தின் புலம்பெயர் சமூக வரலாற்று ஆய்வுகளுக்கு மூலாதாரங்களாக, சான்றாதாரங்களாக இருக்கப் போகின்றன.

யாழ்ப்பாணம் வேலணையிலிருந்து புலம்பெயர்ந்து டென்மார்க்கில் வாழும் வேலணையூர் பொன்னண்ணா என்ற திரு. பொன்.தியாகராஜா அவர்கள் இத்தகையதொரு வரலாற்றுப் பதிவையே மேற்கொண்டுள்ளார். கடந்த 6.5.2012 அன்று லண்டன், ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் சுதுமலைக் கவிஞர் கந்தையா இராஜமனோகரனின் தலைமையில் **பனிமலை தாண்டிய பாதச்சுவடு** என்ற தலைப்பிலான இவரது நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதனை சென்னை மித்ர வெளியீட்டகம் பதிப்பித்திருந்தது.

வேலணை கிழக்கு மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் ஒழுங்குசெய்திருந்த இந்நூல்வெளியீட்டு நிகழ்வை சுதுமலைக் கவிஞர் இராஜமனோகரன் தலைமையேற்று வழிநடத்தினார். மங்கள தீபமேற்றல், அமைதி வணக்கம் ஆகியவற்றைத் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்தைத் தன் கணீரென்ற குரலில் நாமறிந்த ஈழத்துக்கவிஞர் "ஓ வண்டிக்காரா" புகழ் சத்தியமூர்த்தி அவர்கள் வழங்கியிருந்தார். வரவேற்புரையை பொன்னண்ணாவின் பேரன் சுபாஹன் நிகழ்த்தினார். வெளியீட்டுரையை பழைய மாணவர் சங்கத் தலைவல் நடா.சிவராஜா நிகழ்த்தினார்.

கவிஞர் இராஜமனோகரனின் சுவையான தலைமையுரையைத் தொடர்ந்து நூலகவியலாளர் என்.செல்வராஜா விரிவான நூல் ஆய்வுரையை நிகழ்த்தினார். அவரது உரை பொன்னண்ணாவின் வாழ்க்கைச் சரிதையின் வரவின் இன்றைய தேவையை வலியுறுத்துவதாய் அமைந்திருந்தது. அதனைத் தொடர்ந்து ஆசிரியரும் கவிஞருமான எம்.ரி.செல்வராஜா, சுடரொளி ஆசிரியர் ஐ.தி.சம்பந்தன், கனக துர்க்கை அம்மன் கோவில் பொருளாளர் ரி.யோகநாதன், லண்டன் சைவ முன்னேற்றச் சங்கப் பொருளாளர் வி.இராமநாதன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினார். வேலணையூர் பொன்னண்ணா ஏற்புரையை நிகழ்த்தினார். வெளியீட்டு விழாவின் ஆரம்பத்தில் இடம்பெறவெண்டியிருந்த கலைநிகழ்வு, அவர்களது வருகையின் நீண்ட தாமதத்தின் காரணமாக விழா இறுதியில் இடம்பெற்றது. நன்றியுரையை கவிஞர் பொன்னண்ணாவின் மகள் கலைவாணி அருளன் நிகழ்த்தினார். அன்றைய நூல்வெளியீட்டு விழா சுவைமிகு இரவுணவுடன் இனிதே நிறைவெய்தியது.

இவ்வேளையில் எமது சமூக வரலாற்றின் கசப்பானதொரு விடயத்தையும் நினைவு கூரவேண்டியுள்ளது. நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்த மலாயாப் புலப்பெயர்வை மேற்கொண்ட முன்னோடி ஈழத்தமிழர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த சரவணமுத்துப்பிள்ளை முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள். 1937இலும் 1939இலும் இரண்டு பாகங்களில் **மலாயா மான்மியம்** என்ற மலாயாவின் வரலாற்று நூலொன்றை அவர் சிங்கப்பூரில் எழுதியிருந்தார். முதற்பாகத்தில் முதல் 55 பக்கங்களிலும் மலாயாவின் இந்த வரலாறு பதிவுக்குள்ளாகியுள்ளதுடன், மலாயா வரலாற்றில் பதியப்படவேண்டும் என ஆசிரியர் கருதிய பல்வேறு பிரமுகர்களது புகைப்படங்கள் சகிதம் அவரவர்களது வாழ்க்கைக் குறிப்பும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. மலாயா மான்மியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பல ஈழத்தமிழர்கள் பற்றி, அவர்களின் ஆக்க இலக்கியப் படைப்புக்கள் பற்றி இலங்கையின் தமிழ் இலக்கிய வரலாற்று ஆய்வாளர்கள் இன்றுவரை குறிப்பிடத்தவறியுள்ளார்கள்.

அண்மையில் தமிழகத்திலிருந்து ஈழத்தறிஞரான நவாலியூரைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் ந.சி.கந்தையாபிள்ளை அவர்கள் (1893-1967) மலாயாவிலும், தமிழகத்திலும் எழுதிப்பதிப்பித்த 60 நூல்கள் வரை தேடித் தொகுத்து 24 தொகுதிகளில் மீள்பதிப்புச் செய்துள்ளார்கள். இருப்பினும், 60 நூல்கள் வரை எழுதிய அமரர் ந.சி.கந்தையாபிள்ளை பற்றிய தெளிவான வாழ்க்கை வரலாற்றுத் தகவல்களை தாயகத்திலோ, தமிழகத்திலோ, மலேசியாவிலோ எவராலும் வழங்கமுடியாதுள்ளமை துர்அதிர்ஷ்டவசமானதாகும்.

இந்நிலைமை இன்று புகலிடத்தில் வாழும் எம்மவரது வாழ்வும் பணிகளும் தாயகத்தில் மறந்த அத்தியாயங்களாக எதிர்காலத்தில் மாறிவிடக்கூடாது என்பதில் நாம் அக்கறையாக இருக்க வேண்டும். அப்படி நிகழாது என்ற நம்பிக்கையை வேலணையூர் பொன்னண்ணாவின் **பனிமலை தாண்டிய பாதச்சுவடு** என்ற இந்நூல் முயற்சி நம்பிக்கை ஒளியை ஊட்டுவதாக அமைந்துள்ளது. மேலும் பல வாழ்க்கை வரலாறுகள் தொடர்ந்தும் வெளிவந்து இனிவரும் தலைமுறையினர் எமது புலப்பெயர்வை வரலாறாக்குவதற்கான மூலாதாரங்களாக அவை திகழ வேண்டும். பொன்னண்ணாவின் நூல் அதனையே எமக்குச் சொல்லவருகின்றது.